# சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
# வைப்பாளார்/ கடன்பாட்டாளர்களுக்கான அறிவித்தல்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 31ஆம் பிரிவின் நியதிகளில் சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி இற்கு வழங்கப்பட்ட உரிமம் 2018.03.05 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இரத்துச்செய்யப்பட்டிருக்கிறது. மேலும், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதி குத்தகைக்குவிடல் நிறுவனமொன்றாக பதிவுசெய்யப்பட்ட சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பதிவுச் சான்றிதழ் 2018.03.05 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வறிவித்தலின் நோக்கம், தனிப்பட்டவர்களினாலும் ஏனைய சட்ட ரீதியான நிறுவனங்களினாலும் சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் லிமிடெட்டில் செய்யப்பட்ட வைப்புக்கள்/ சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் இலிருந்து அவர்களினால் பெறப்பட்ட கடன்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுக் கொள்வதும்இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டங்களின் ஏற்பாடுகளுக்கிணங்க காப்பறுதி செய்யப்பட்ட வைப்புக்களின் மீள்கொடுப்பனவுகள் பற்றி பரிசீலனையில் கொள்வதுமேயாகும். ஆகவே, அனைத்து வைப்பாளர்களும் சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் இல் அவர்கள் வைப்புச் செய்த/ சென்றல் இன்வெஸ்ட்மென்ட் இலிருந்து அவர்கள் பெற்ற கடன்களின் விபரங்களை கீழே தரப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க பின்வரும் முகவரிக்குச் சமர்ப்பிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இப்படிவம் மத்திய வங்கியின் வெப்தளமான www.cbsl.gov.lk இலும் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. சரியான முறையில் நிரப்பப்பட்ட படிவத்தினை நிலையான வைப்புச் (தவணை) சான்றிதழ்கள்/ பெயர், கணக்கு இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை உள்ளடக்கிய சேமிப்பு புத்தகத்தின் பக்கங்கள் போன்றவற்றின் பிரதிகளுடன் சேர்த்து பதிவு அஞ்சல் மூலம் 2018.04.20 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பணிப்பாளர்
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

**மேலதிக விசாரணைகளுக்கு**
**0112- 477258 / 0112- 477504**
**0112-477229 / 0112-398733**

## சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி இல் செய்யப்பட்ட வைப்புக்கள் மற்றும் சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் இலிருந்து பெறப்பட்ட கடன்களின் விபரங்கள்

1. முழுப்பெயர் :
   (தனிப்பட்ட/ கூட்டு/ நிறுவனம்)
2. தேசிய அடையாள அட்டை இல./ கடவுச்சீட்டு/ வியாபார பதிவு இல. :
3. அ. வைப்புக்களைச் செய்த நேரத்தில் முகவரி :
   ஆ. தற்போதைய முகவரி (மேலேயுள்ளவற்றிலிருந்தும் வேறுபட்டதாக இருப்பின்) :
4. தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி: வதிவிடம்: கைத்தொலைபேசி:
5. வைப்புக்களின் விபரங்கள்: (2018.03.05இல் உள்ளவாறு)

| கணக்கு இல/ சான்றிதழ் இல. | வைப்புக்களின் வகை சேமிப்பு/ நிலையான வைப்பு (தனிப்பட்ட/கூட்டு) | வைப்புத் திகதி | காலம் | தொகை (ரூ.) | வட்டி வீதம் (ஆண்டிற்கு) | வட்டி பெறப்பட்ட இறுதித் திகதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

6. கம்பனியிலிருந்து பெறப்பட்ட கடன்களின் விபரங்கள் (2018.03.05இல் உள்ளவாறு)

| கடன்/ கணக்கு இல. | முதல் தொகை (ரூ.) | வெளிநின்ற தொகை (ரூ.) | காலம் | கடன் வழங்கப் பட்ட திகதி | வட்டி வீதம் (ஆண்டிற்கு) | மீள்கொடுப்பனவின் இறுதித் திகதி | பிணையங்களின் விபரங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

நான்/ நாங்கள் மேலே வழங்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் துல்லியமானவையுமென இத்தால் பிரகடனம் செய்கின்றேன்/ செய்கின்றோம்.

.................................................. ..................................................

திகதி கையொப்பம்

**குறிப்பு: நீங்கள் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைக்கவும்**

(அ) சென்றல் இன்வெஸ்ட்மன்ற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்டினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் அல்லது வேறு ஏதேனும் ஆவணங்கள்

(ஆ) தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது கம்பனிப் பதிவாளரினால்/ பிரதேச செயலாளரினால்/ உள்ளூராட்சிமன்றங்களினால் வழங்கப்பட்ட வியாபாரப் பதிவின் பிரதிகள்

(இ) பராயமடையாதோர் கணக்குகளைப் பொறுத்தவரையில் - பராயமடையாதவரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியுடன் சேர்த்து பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு

(ஈ) பதிவு செய்யப்படாத களரிகள், சங்கங்கள், பங்குடமை அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்கள் - அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரிகள்/ பங்காளர்களின் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு

**பணிப்பாளர் - வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
**0112477504 0112477738 dsnbfi@cbsl.lk**